# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கலைப்பீடம்

## முதலாம் வருட கலைமாணிப் பரீட்சை, பருவம் – I – 2023/2024

## PSC 1101 – அரசியல் விஞ்ஞானம்: ஓர் அறிமுகம்

**நேரம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்**

**நான்கு (04)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

ஒவ்வொரு விடையும் அதிகபட்சம் **பதினைந்து (15)** புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

---

01. "அரசியல் என்பது எங்கும் வியாபித்திருக்கிறது." இக் கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? உமது விடையை சமகால உதாரணங்களுடன் விளக்குக.

02. வெவ்வேறுபட்ட சூழ்நிலைகளின் கீழ் அரசியல் அதிகாரம் எவ்வாறு பல்வேறு வடிவங்களை எடுக்கின்றது என்பதை விளக்குக.

03. பாரம்பரிய கிரேக்க சகாப்தத்திலிருந்து கைத்தொழிற் புரட்சி வரை மேற்கத்திய சமூகங்களில் அரசியல் பற்றிய கற்கை எவ்வாறு பரிணாமம் பெற்றது என்பதை சுருக்கமாக விபரிக்குக.

04. **ஒன்றில்**

அ) அரசியல் விஞ்ஞான ஆய்வின் மரபு ரீதியான மற்றும் நவீன அணுகுமுறைகளுக்கு இடையிலான வேறுபாடுகளை அடையாளப்படுத்துக.

**அல்லது**

ஆ) அரசியலைக் கற்பதில் நடத்தைவாதிகளின் அணுகுமுறையின் நன்மைகள் மற்றும் தீமைகள் யாவை?

05. அரசியல் விஞ்ஞானக் கற்கைநெறி ஒரு விஞ்ஞானமா அல்லது ஒரு கலையா என்பதைக் கலந்துரையாடுக.

06. அரசியலில் சமூக இயக்கங்களின் தாக்கத்தை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

07. உமது தெரிவாக இரண்டு (02) அரசியல் கருத்தியல்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

08. பின்வரும் கருப்பொருள்களில் ஏதேனும் மூன்று (03) பற்றி குறிப்புகள் எழுதுக:

அ) நாளாந்த அரசியல்

ஆ) சமூக ஒப்பந்தம் பற்றிய ஜோண் லொக்கின் எண்ணக்கரு

இ) சம்மதத்தினாலான விதி

ஈ) அரசிற்கான மார்க்சிய அணுகுமுறை

உ) அரசியல் நிறுவனங்கள்

ஊ) இலங்கையில் 2022 இல் மக்களின் போராட்டம்

***************